## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 61 ஆம் பந்திக்கு முரணாக அதிகார சபையால் பணிக்கொடை ஒதுக்கீகளை ஒதுக்கீடு செய்யும் போது ஊழியர்கள் இறுதித் தடவையாகப் பெற்ற சம்பளம் மற்றும் சேவைக் காலம் மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. அதன் போது ஊழியர்களின் சேவைக்காலம் மற்றும் சம்பளம் சரியாக கவனத்தில் கொள்ளாமையின் காரணமாக ஆண்டின் பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 15,063,462 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கு அப்பெறுமானத்தால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பணிக்கொடை கணிப்பீடு செலுத்தப்படுவதுடன் அதன் ஊழியர்கள் இறுதித் தடவையாகப் பெற்ற சம்பளம் மற்றும் சேவைக் காலம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்னபற்ற வேண்டியிருந்ததுடன் பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யும் போது ஊழியர்களின் சேவைக்காலம் மற்றும் சம்பளம் சரியாக கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 96 ஆம் பந்திக்கு முரணாக அதிகார சபையால் 03 வருட பயன்தரு ஆயுட்காலத்துடன் 2021 திசெம்பர் 03 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 2,170,800 ஆன கணனி மீள்வைரஸ் மென்பொருள் ஆண்டிற்கு 10 சதவீதம் படி பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதன் காரணமாகவும் ஏனைய கற்பனைச் சொத்துக்களின் காலக் கழிவு கணிப்பிடுதலின் வழுவின் காரணமாகவும் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டுகளுக்கும் உரிய காலக் கழிவு செலவினம் முறையே ரூபா 1,146,479 இனாலும், ரூபா 13,537,537 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 1,146,476 குறைவாகவும் கற்பனைச் சொத்துக் கணக்கின் மீதி ரூபா 14,684,016 இனாலும், திரண்ட மிகைக் கணக்கின் மீதி ரூபா 13,537,537 இனால் அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பந்தி இலக்கம் 103 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதற்குரிய வெளிப்படுத்தல்கள் கணக்கீட்டுக் குறிப்புக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் கற்பனைச் சொத்துக்களின் காலக் கழிவு கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முழு நேர மற்றும் பகுதி நேர பாடநெறிக் கட்டண வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர்வரும் ஆண்டுகளுக்குரிய ரூபா 123,980,669 வருமானம் மிளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் முற்பணமாகப் பெற்ற வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அட்டுறு அடிப்படையின் கீழ் வருமானம் உழைக்கின்ற சந்தர்ப்பத்தில் வருமானமாக இனங்காண்பதற்கு அதிகார சபையின் வருமானக் கொள்கையாக எடுக்கப்பட்டுள்ளது. | முழு நேர மற்றும் பகுதி நேர பாட நெறிக் கட்டண வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர் வரும் ஆண்டுகளுக்குரிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பயிற்சி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் அமைச்சினால் பயிற்சி உபகரணங்களை பயன்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 68,483,520 உரிய உபகரணங்கள் மற்றும் சொத்துக் கணக்குகளில் மூலதனமாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கட்டிடக் கணக்கில் மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக பயிற்சி உபகரணக் கணக்கின் மீதி மற்றும் கட்டிடக் கணக்கின் மீதி அப் பெறுமானத்தால் முறையே குறைத்தும் மற்றும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலக்கம் 176 என்ற நாட்குறிப்பில் கட்டிடக் கணக்கில் ரூபா 68,483,520 அகற்றப்பட்டு இந்த தவறு சரி செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | நிதிக் கூற்றுக்களில் பிரகாரம் நூலகப் புத்தகங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், கணனி துணைப்பாகங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காக மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வு முறையே ரூபா 183,689 தொகை, ரூபா 17,337,769 தொகை, ரூபா 58,120,905 மற்றும் ரூபா 101,316,642 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் அப்பெறுமதி முறையே ரூபா 1,085,846 தொகை, ரூபா 15,157,964 தொகை, ரூபா 61,072,840 மற்றும் | தற்போது பெறுமானத் தேய்வு மாற்றங்களுக்கான காரணங்கள் இனங்கண்டு எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டுக்குரிய பெறுமானத் தேய்வு சரியாகக் கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 90,661,425 ஆனமையால் மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 8,980,930 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பற்றாக்குறை மற்றும் நிலையான சொத்துக்கள் ரூபா 8,980,930 குறைத்துக் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டுக்கு உரிய பெற வேண்டிய செயலாற்றல் படிகள் ரூபா 5,406,178 கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக பற்றாக்குறை மற்றும் பெற வேண்டிய செயலாற்றல் படிகள் அப் பெறுமானத்தால் முறையே அதிகரித்தும் மற்றும் குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு கவனத்தில் கொள்வதற்கு தேவையான றடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய செயலாற்றல் படிகளை சரியாக இணங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டிற்குரிய திறன் சிசுசவிய மாணவர் உதவித் தொகை செலவினம் ரூபா 29,080,000 மீளாய்வாண்டின் செலவினமாகக் காண்பிக்கப்பட்டமை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய பெறவேண்டி இருந்த மாணவர் உதவித் தொகை ரூபா 44,526,000 வருமானமாக காண்பிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 73,606,000 அதிகரித்தும், திரண்ட நிதியம் ரூபா 29,080,000 அதிகரித்தும் மற்றும் பெற வேண்டிய மாணவர் உதவித் தொகை வருமானம் ரூபா 44,526,000 குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் நிதி கிடைத்த பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் காசு அடிப்படையில் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ஆண்டிற்கு உரியதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய நிபுனதாஸ் சிசுசவிய மாணவர் உதவித் தொகை வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்குகளில் காண்பித்தல் வேண்டும். |
| (ஊ) | கட்டுபேத்த கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தில் பாடநெறிகளை பின்பற்றுகின்ற மாணவர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 2,456,000 உரிய நிதியக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக அதிகார சபையின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை மற்றும் நலன்பரி நிதியக் கணக்கு அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நலன்புரி நிதியத்தின் யாப்பின் பிரிவின் பிரகாரம் மிகைப் பணத்தை மீண்டும் மாணவர்களுக்கு வழங்காதிருப்பதுடன் நிறுவனத்தின் பயிற்சி நடவடிக்கைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தேவையான போது பயன்படுத்தப்படுகின்றது. | மாணவர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக அறவிடப்படுகின்ற பணம் உரிய நிதியக் கணக்கில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆதனங்கள், | இந்த தவறு எதிர்காலத்தில் சரி | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் |

| | | |
|---|---|---|
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் ரூபா 38,281,274 காசு உட்பாய்ச்சலாக காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 42,175,247 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 3,893,973 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய மீதி | 2,929,000 | 10,766,575 | 7,837,575 | இந்த வேறுபாட்டுக்கான காரணமாக அதிகார சபை மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி நிறுவனத்தின் மூலம் சான்றுகள் பத்திரம் விநியோகித்தல் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூன்றாம் நிலை தொழில் கல்வி நிறுவனத்துடன் முறைமையின் பிரகாரம் சான்றிதழ் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அதிகார சபையால் கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய தேவைகளுக்காக 89 வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 6,685,455 முற்பணத் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு முறைமையின் பிழையினால் முன்னர் ஏற்பட்ட தவறாக இருந்தததை சுட்டிக் காட்டுவதுடன் 2023 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட புதிய Chart of Accounts மூலம் தற்போது கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுகின்றது. | விரைவாக இந்த முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதிகார சபையின் சேவையில் இருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,592,757 கடன் மற்றும் முற்பணம் அந்த உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விலகிச் செல்கின்ற சந்தர்ப்பத்தின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரையில் ரூபா 247,452 அறவிடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மிகுதி பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச சபைக்கு அறவிட வேண்டிய கடன் மற்றும் முற்பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விலகிச் செல்கின்ற சந்தர்ப்பத்தின் போது அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு சட்டத்தின் | | | |
| i. | 15(1) ஆம் பிரிவு | அதிகார சபையின் தேசிய நிறுவனத்தால் பேணிச் செல்லப்படுகின்ற 37 பகுதி நேர பாடநெறிகளில் எந்த ஒரு பாடநெறியும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | 2 ஆம் பகுதியின் vi ஆம் அத்தியாயத்தின் 37(எ) பிரிவு | தொழிற் பயிற்சி வழங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் பயிற்சி அளிக்கும் இயலுமையை அபிவிருத்தி செய்வதற்காக அதிகார சபையால் 2020 | 2020, 2021 மற்றும் 2022 என்ற ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமையினால் பயிற்சி நிறுவனங்களில் அபிவிருத்திகளுக்கான | சுட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் தொழிற் பயிற்சி வழங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் எந்த ஒரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் சில செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பயிற்சி அளித்தல் இயலுமையை அதிகரித்துக் கொள்வதற்குகான பணிகளை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 396(இ) பிரிவு | விநியோகிக்கப்பட்டிருந்த போது கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாத காலத்தை விஞ்சிய கூட்டுமொத்தமான ரூபா 1,298,541 பெறுமதி உடைய 72 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த காசோலைகளில் ரூபா 243,791 பெறுமதியான 44 காசோலைகள் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் 2024 ஏப்ரல் மாதம் வரையில் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | 06 மாதங்களை விஞ்சிய சகல காசோலைகள் தொடர்பாகவும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதி இலக்கம் 02/2015 மற்றும் 2022 சனவரி 18 ஆந் திகதிய இலக்கம் 02/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | தொலைபேசிப் படி உரித்தற்ற பதவி நிலை தரமல்லாத பதவிகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தொலைபேசி இணைப்புகளுக்காக அதிகார சபையால் 2018 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரையான காலப் பகுதிக்காக கூட்டுமொத்தமாக ரூபா 6,462,922 மாதாந்த பட்டியல்களாக தனியார் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கடமைத் தேவையின் அடிப்படையில் பதவிநிலை தரமல்லாத பதவிகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்காக நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்த தொலைபேசி இணைப்புக்களுக்குரிய மாதாந்த கட்டணமாக ரூபா 100 மற்றும் அரசாங்கத்தின் வரித் தொகை மாத்திரம் தனியார் தொலைபேசிக் கம்பனிக்கு செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 81,595,958 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,715,737 ஆகும். ஆதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 74,880,221 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பெறுமானத் தேய்வு செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்ட பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 73,804,932 ஆன பயிற்சி உபகரணங்கள் 2024 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரையும் கட்டுநாயக்க பொறியியல் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் பெறுமதி ரூபா 87,588,591 ஆன பயிற்சி உபகரணங்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் ஸ்தாபிக்கப்படாமை மற்றும் அந்த உபகரணங்களை பாவனைக்கு எடுப்பதற்கு தேவையான ஏனைய உபகரணங்கள் கிடைக்காமையின் காரணமாக 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் ஆக்கபூர்வமானதாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கப் பெறாத பயிற்சி உபகரணங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று அமைச்சின் மூலம் நியமிக்கப்பட்ட மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் KIP நிறுவனத்திற்கும் அனுப்பப்பட்டிருந்த போதும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு கிடைக்கப் பெறாதிருந்த உபகரணங்கள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொண்டு விரைவாக உரிய உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் போது பகுதி திறன் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் அதிகார சபைக்கு வழங்குவதற்கு இணங்கியிருந்த போதும் 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுகை மோசடியின் காரணமாக ரூபா 29 மில்லியன் இழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த ரூபா 29.9 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டின் போது நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சீராக்கி கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டுள்ளதுடன் அதற்காக 2024 மே மாதம் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தது. | பெறுகை மோசடியின் காரணமாக அதிகார சபைக்கு ரூபா 29 மில்லியன் இழந்தமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபைக்குரிய 03 தேசிய நிறுவனங்களின் மூலம் பயிலுநர் மாணவர்களின் மாணவர் நலன் புரி நிதியத்திற்கு அறவிடப்படுகின்ற பணம் நலன்புரி | மாணவர் நலன்புரி யாப்பின் பிரகாரம் மீண்டும் வழங்கும் அடிப்படையில் பாட நெறி ஆரம்பத்தின் போது மாணவர்களிடம் இருந்து அறவிடப்படும் தொகை | மீள செலுத்தும் அடிப்படையில் மாணவர்களிடம் இருந்து அறவிடப்பட்டு நலன்புரி நடவடிக்கைகளுக்காக பயன் படுத்தப்படாத |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திறைசேரி அங்கீகாரம் இன்றி ரூபா 48,995,619 முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான வைப்பில் இடுவதற்கும், அந்த வட்டியை மாணவர்களின் துறைசார் சுற்றுலா மற்றும் பிரயோக பரிசோதனைகளுக்காக தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் அங்கீகாரம் உள்ளது. பாடநெறி முடிவடைந்த பின்னர் அந்த தொகை மாணவர்களுக்கு வழங்குவதற்கோ அல்லது மாணவர்களின் விருப்பங்களின் அடிப்படையில் சான்றிதழ் வழங்கும் விழாக்களுக்களுக்காக பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். | பணம் மீண்டும் மாணவர்களுக்கு செலுத்துவதற்கான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | அதிகார சபைக்குரிய ஒறுகொடவத்த மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களிடமிருந்து மீள செலுத்தும் அடிப்படையில் முன்னைய ஆண்டுகளின் போது அறவிடப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 7,024,147 தொகையில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எந்த ஒரு தொகையும் மீண்டும் மாணவர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டின் பின்னர் எந்த ஒரு மாணவரும் விண்ணப்பித்திருக்க வில்லை. | மீள செலுத்தும் அடிப்படையில் முன்னைய ஆண்டுகளின் போது மாணவர்களிடம் இருந்து அறவிடப்பட்ட பணத்தை மீண்டும் மாணவர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் நோக்கங்களுக்கு புறம்பாக முறையான அங்கீகாரமும் இன்றி நபர்களை வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக அனுப்பும் நோக்கில் 2022 மார்ச் 16 ஆந் திகதி NAITA Foreign Employment (Pvt) Ltd என்ற பெயரில் தனியார் கம்பனி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 121 | உரிய கம்பனியினால் எந்த ஒருநபரும் வெளிநாடு செல்லாது இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் நேர் முகப்பரீட்சைக்கு தோற்றியிருக்காத 42 வேலை வாய்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு ரூபா 10,500 வீதம் பணம் மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் நோக்கங்களுக்கு புறம்பாக மற்றும் முறையான அங்கீகாரம் இன்றி ஸ்தாபிக்கப்பட்ட தனியார் கம்பனி தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளல் வேண்டும். நேர்முகப் பரீட்சையில் சித்தி அடைந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு |

| | | | |
|---|---|---|---|
| | நபர்களிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 1,270,500 தொகை அதிகார சபையின் வங்கிக் கணக்கில் செலவு வைத்து அதில் முறையான நியமனம் இன்றிய நபர் ஒருவருக்கு சம்பளம் மற்றும் எரிபொருள் படி செலுத்துவதற்காக ரூபா 402,955 தொகையும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்வதற்காக ரூபா 448,000 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | | கிடைக்காத நபர்களுக்கு அவர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தை மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | அதிகார சபையின் மோட்டார் வாகன பொறியியல் நிறுவனத்தின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக தகுதியற்ற மூன்றாம் தரப்பினரால் இறக்குமதி செய்யப்பட்ட அதிக இயலளவை உடைய மோட்டார் வாகனம் ஒன்றை விடுவித்துக் கொள்வதற்கு வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது அதிகார சபையால் சுங்க, துறைமுக மற்றும் விடுவித்தல் கட்டணமாக ரூபா 16,510,115 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வாகனம் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | NVQ 04 பயிலுகின்ற மாணவர்களினால் அவ்வாறான அதி தொழில்நுட்பத்தை உடைய மோட்டார் வாகனம் ஒன்றை கழற்றுதல் மற்றும் பொருத்துதலின் அறிவு மற்றும் இயலுமை காணப்படாதிருந்ததுடன் மாணவர்களின் பிரயோக செயற்பாடுகளுக்காக கணிசமான வாகன அளவொன்று மோட்டார் வாகன பொறியியில் பயிற்சி நிறுவனத்திடம் காணப்படுகின்றது. | நிறுவனத்தின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பொருத்தமான பயிற்சி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை ஆக்கபூர்வமானதாகப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் 100 மாணவர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டு சிவில் பொறியியல் பிரிவிற்கு கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 286,330,412 பொருட் பதிவேட்டு மற்றும் பொருட் பதிவேடு அல்லாத உபகரணங்கள் கிடைத்திருந்த | மாணவர்களை சேர்த்துக் கொள்ளலை அதிகரித்துக் கொள்வதற்காக புதிய தொழில் நுட்ப டிப்ளோமா மற்றும் உயர் தொழில் நுட்ப டிப்ளோமா இந்த ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது. | வெளிநாட்டு உதவி (கடன்) ஆக பெறப்பட்ட செயற்திட்டத்தை அங்கீகரித்துக் கொள்ளும் போது திட்டமிடப்பட்ட பிரகாரம் சேர்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து இந்த செயற்திட்டத்தின் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முறையே 41 மற்றும் 18 வரை குறைவடைந்ததன் மூலம் இந்த ஆகக் கூடிய பெறுமதியுடைய பயிற்சி உபகரணங்களில் உச்ச நலன்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | கிடைக்கப்பெற்ற சொத்துக்களில் இருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது 70 மாணவர்கள் சேர்க்கப்பட்டு Machanical General Engineering பாடநெறிக்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 661,111,008 பெறுமதியான உபகரணங்கள் கிடைத்திருந்த போதிலும் அந்த உபகரணங்களை ஆக்கபூர்வமானதாக பயன் படுத்துவதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்படாமையின் காரணமாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது உள்ளீர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முறையே 31 மற்றும் 25 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் மாணவர்களை சேர்க்கும் சதவீதம் 64 வீதத்தால் குறைவடைந்திருந்தது. | இந்த துறைகளில் வேலை வாய்ப்பு குறைவாக இருந்தமையின் அடிப்படையில் மாணவர்கள் சிவில் பொறியியல் துறைக்கும் மற்றும் இயந்திர பொறியியல் துறைக்கும் ஈடுபடுதல் குறைவடைந்து இருந்தது. | செயற்திட்டத்தை அங்கீகரிக்கும் போது திட்டமிடப்பட்ட பிரகாரம் சேரக்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இந்த சொத்துக்களில் இருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | துறைசார் திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் அதிகார சபைக்கு வழங்கப்பட்டு 2021 ஆம் ஆண்டில் இருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 7,699,518 தொகைக்கு உரிய செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் இதில் ரூபா 7,000,000 பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டம் முடிவடைந்ததன் காரணமாக காணப்பட்ட ரூபா 7,699,518 மீதி தொடர்பாக ஏதாவது தீர்மானம் எடுக்கும் வரை நிலையான வைப்புக்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்படுகின்ற பணம் தாமதம் இன்றி அந்த பணிகளுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) முறையான ஆட்சேர்ப்புத் திட்டம் ஒன்று மற்றும் நியமனக் கடிதம் விநியோகிக்கப்படாமல் மூன்று தேசிய நிறுவனங்களுக்காக வெளிவாரி விரிவுரையாளர்களை சேர்த்து மீளாய்வாண்டின் போது மாத்திரம் வெளிவாரி விரிவுரையாளர் படியாக ரூபா 99,034,763 செலுத்தப்பட்டிருந்தது. | வெளி விரிவுரையாளர்களுக்கு உரிய படிகள் மற்றும் நியதிச் சட்டப் படிகளை உள்ளடக்கிய நியமனக் கடிதம் வழங்கி அவர்களின் சேவை பெறப்படுகின்றது. வெளி விரிவுரையாளர் படி செலுத்துதல் பிரதான அலுவலகத்தின் பயிற்சிப் பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகத்தின் மூலம் மேற்பார்வை செய்யப்படுகின்றது. | முறையான ஆட்சேர்ப்பு திட்டம் ஒன்று மற்றும் நியமனக் கடிதம் விறியோகித்து விரிவுரையாளர்களை சேர்க்க வேண்டி இருந்ததுடன் பிரதான அலுவலகத்தின் மூலம் முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஒறுகொடவத்த பயிற்சி நிலையத்திற்காக பெறுகை நடைமுறைக்கு புறம்பாக 2022 திசெம்பர் 14 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,805,652 பெறுமதி உடைய வளிப்பதனாக்கி இயந்திரத்தின் பெறுகைகள் மேற்கொள்ளும் போது கொள்வனவுக் கட்டளை விநியோகிக்கப்பட்ட பின்னர் அந்த வழங்குனருக்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்ட மாதிரி மற்றும் போலியான பெறுகைக் கடிதங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட கோவை ஒன்று கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதில் 02 இயந்திரங்கள் 2024 சனவரி அளவில் செயலிழந்து காணப்பட்டது. | எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை தடுத்து பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சரியாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | கொள்வனவு செயற்பாடுகளுக்காக பெறுகை முறைமை பின்பற்ற வேண்டி இருந்ததுடன் போலியான கோவை தயாரித்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |